


புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2054 | ஜனவரி 19, 2023 | புரட்சி 22 | முழக்கம் 01 | விலை: ரூ.3.00

# ‘நான் கருஞ்சட்டைக்காரன்’

## பொங்கல் விழாவில் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்

*13.1.2013 அன்று சென்னை மாவட்டக் கழக சார்பில் நடந்த தமிழர் திருநாள் விழா கொண்டாட்டத்தில் பங்கேற்ற தி.மு.க. இளைஞரணித் தலைவர் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், விளையாட்டுப் போட்டியில் வெற்றியடைந்தவர்களுக்கு பரிசுகளை வழங்கியதோடு பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதிய ‘அதிகார வரம்புகளை மீறும் ஆளுநர்கள்’ நூலை வெளியிட்டார். அவர் நிகழ்த்திய உரை:*



“நான் இங்கு வெள்ளை சட்டை அணிந்து வந்துள்ளேன். ஆனால், எனக்கு கருப்பு சட்டை அணிவது தான் மிகவும் பிடித்த ஒன்று. நான் நிறத்திற்காகக் கூறவில்லை; கருத்திற்காக கூறுகிறேன். அதை உணர்ந்து தான் அன்போடு என்னை உரிமையோடு இந்த தமிழர் திருநாள் நிகழ்ச்சிக்கு அண்ணன் கொளத்தூர் மணி அவர்கள் அழைத்திருந் தார்கள். நானும் அதே எண்ணத்தோடு தான் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று உங்களோடு இந்த பொங்கல் திருநாளை கொண்டாடு வதற்காக இங்கு வந்திருக்கிறேன். அதுவும் திராவிடர் விடுதலைக் கழக மேடையில் நான் பங்குபெறும் முதல் நிகழ்ச்சியே தமிழர் திருநாள் விழா நிகழ்ச்சியாக இருப்பதும் அதில் இன்னும் சிறப்பு என்னவென்றால் நம்முடைய சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியிலும் இது நடப்பதால் கூடுதல் மகிழ்ச்சியாக இருக்கிறது.

பொங்கல் திருவிழாவோடு சேர்ந்து இந்த நேரத்திற்கு மிகவும் தேவைப்படுகின்ற ஒரு புத்தகம் “அதிகார வரம்புகளை மீறும் ஆளுநர்கள்” என்கிற இந்த புத்தக வெளியீடு நடைபெற்றுள்ளது. அண்ணன் விடுதலை இராசேந்திரன் எழுதியிருக்கிறார்கள். கண்டிப்பாக நீங்கள் இந்தப் புத்தகத்தை வாங்க வேண்டும். காலத்திற்கு ஏற்ற ஒரு புத்தகம். நான் மணி அண்ணனிடம் கேட்டேன், “எப்படி இந்த புத்தகத்தை அதற்குள் ஏற்பாடு செய்தீர்கள் ?” என்று அதற்கு அவர், “முன்பே இதற்கான திட்டம் இருந்தது இப்பொழுது சரியான தருணம் என்பதால் வெளியிட்டோம்” என பதிலளித்தார். புத்தகத்திற்கு மிகச் சிறப்பான ஒரு அட்டைப்படம் “ஆட்டுத் தாடியோடு”. பேரறிஞர் அண்ணா அவர்கள் கேட்டார் “ஆட்டுக்கு எதற்கு தாடி ? நாட்டுக்கு எதற்கு ஆளுநர் ?” என்று அதை நினைவுபடுத்தும் வகையில் ஒரு தரமான புத்தகத்தை வெளியிட்டிருக்கிறீர்கள். அதற்கு இந்த நேரத்திலே கழகத்தின் சார்பாக, இளைஞரணி சார்பாக நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழர் திருநாள், கடந்த 23 ஆண்டுகளாக இங்கு பொங்கல் நிகழ்ச்சி சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. அதற்கும் இந்த விழாக் குழுவினருக்கு என்னுடைய வாழ்த்துகள். தமிழர் திருநாளான பொங்கல் சாதி,மத ஏற்றத்தாழ்வுகள் எதுவுமில்லாத ஒரு சமத்துவ திருவிழா. இது உழவர்களின் திருவிழா; இன்னும் சொல்லப்போனால் இது உழைக்கும் மக்களின் திருவிழா. நம்முடைய திராவிடத்தினுடைய திருவிழா. நம்மிடையே சில சடங்குகளை, மூடநம்பிக்கை பழக்கங் களை, கற்பனைகளைத் திணித்திருக்கிறார்கள், திணித்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய பழக்க வழக்கங்கள் அவர்களுக்கு ஏற்ற வகையில் மாற்றி, அவர்களுடையதாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களிடமிருந்து தப்பித்திருப்பது இந்த பொங்கல் விழா மட்டும் தான். அதற்கு காரணமும் நம் திராவிட இயக்கத் தலைவர்களும், தமிழறிஞர்களும் தான். அத்தகையப் பொங்கல் விழாவில், குறிப்பாக திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் நடக்கும் இந்த பொங்கல் விழாவில் அண்ணன் கொளத்தூர் மணி, அண்ணன் விடுதலை இராசேந்திரன் ஆகியோருடன் கலந்துகொள்வது மிக்க மகிழ்ச்சியளிக்கிறது.

நாங்களெல்லாம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தேர்தல் அரசியலில் களத்தில் நின்று பெரியார் கொள்கைகளுக்கு செயல் வடிவம் கொடுக்க, சட்ட அங்கீகாரம் பெற்றுத்தர பாடுபட்டு செயல்பட்டு வந்து கொண்டிருக்கிறோம். ஆனால் கொளத்தூர் மணி, விடுதலை இராசேந்திரன் போன் றோர்கள் எல்லாம் திவிக சார்பில் அய்யா பெரியாரின் கொள்கைகளை வீதி தோறும் மக்களிடம் கொண்டு சென்று சமூக தளத்தில் மாற்றங்களை ஏற்படுத்த அயராது உழைத்துக் கொண்டே இருக்கிறார்கள். திராவிடர் இயக்கத்தின் உரிமைகளை காக்கவும், தொடர்ந்து போராடி கொள்கைகளை பரப்பி வரும் அண்ணனைப் போன்ற பெரியாரிய தோழர்களின் உழைப்பை மிக முக்கியமானதாக நான் கருதுகிறேன்.

**சமூக நீதித் திட்டங்கள்**

நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் எண்ணற்ற பல சமூக நீதித் திட்டங்களையும், சமூக நீதி தலைவர்களுடைய கொள்கை களையும் கொண்டு சேர்க்கும் முன்னெடுப்பு களையும் தொடர்ந்து செய்து கொண்டிருக் கிறார். புரட்சியாளர் அம்பேத்கருடைய பிறந்த நாளை சமத்துவ நாளாக அறிவித்தார். திராவிட இயக்க கொள்கைகளின் ஆசான் அய்யா பெரியார் அவர்களுடைய பிறந்த நாளை சமூக நீதி நாளாக அறிவித்து தமிழகமெங்கும் அரசு அலுவலகங்களில் சமூக நீதி நாள் உறுதிமொழி எடுக்க வேண்டும் என கட்டளையிட்டுள்ளார். முத்தமிழ் அறிஞர் கொண்டு வந்து கடந்த பத்து ஆண்டுகளாக பராமரிப்பின்றி பாழாய்ப் போன பெரியார் நினைவு சமத்துவபுரங்களை எல்லாம் தமிழ்நாடு முழுவதும் மீண்டும் சீரமைத்து புனரமைப்பு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நான் சமீபத்தில் கூட சிவகங்கை மாவட்டத்திற்கு என் துறை சார்பாக ஆய்வு செய்வதற்கு சுற்றுப் பயணம் சென்றிருந்தேன். அப்போது சிவகங்கை மாவட்டத்தில் குமாரப்பேட்டை ஊராட்சி, சிறுகூடல்பட்டி கிராமத்தில் உள்ள பெரியார் நினைவு சமத்துவபுரத்திற்கு சென்று அங்குள்ள குடியிருப்புவாசிகளில் 100 குடும்பங்களுக்கு பட்டா வழங்கினோம். அன்று பெரியாருடைய நினைவுநாள் என்பது எதேச்சையாக நடந்த ஒரு ஒற்றுமை. சமத்துவபுர நுழைவு வாயிலில் இருந்த

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

### கழகத் தலைவர் மற்றும் பொறுப்பாளர்கள் பங்கேற்கும் கழகக் கலந்துரையாடல் கூட்டங்கள்

*கழகத் தலைவர் மற்றும் மாநிலப் பொறுப்பாளர்கள் கலந்து கொள்ளும் மாவட்ட கலந்துரையாடல் கூட்டங்கள் (நான்காம் கட்ட பயணப் பட்டியல்)*

*26.01.2023 காலை 10.00 கோவைமாவட்டம்*

*26.01.2023 மாலை 5.00 மணி திருப்பூர் மாவட்டம் ( திருப்பூர் இரவு தங்கல்)*

*27.01.2023 காலை 10.00 மணி நாமக்கல் மாவட்டம்*

*27.01.2023 மாலை 05.00 மணி கரூர் மாவட்டம்*

*மேற்கண்ட மாவட்டப் பொறுப்பாளர்கள் கூட்டம் நடைபெறும் ஊர் மற்றும் இடத்தை முடிவு செய்து தலைமைக் கழகத்திற்கு தகவல் தர கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.*

*தலைமை அலுவலகம், திராவிடர் விடுதலைக்கழகம்*
*18.01.2023*

**தலையங்கம்**

## ராகுல்காந்தி நடத்தும் கருத்தியல் போராட்டம்

ஆர்.எஸ்.எஸ்.சின் பார்ப்பனிய சனாதனம் ஒரு அமைப்பு மட்டுமல்ல; அது ஒரு ஆபத்தான சமூகத்திற்கு எதிரான கொடூர கருத்தியல் வடிவம் என்ற தெளிவான புரிதலுக்கு ராகுல்காந்தி வந்துள்ளார். இந்திய அரசியலில் இப்படி ஒரு சித்தாந்தத்தை எதிர்த்து மக்களை அணி திரட்டும் இளம் தலைவர் ஒருவர் புறப்பட்டிருக்கிறார் என்பதே நம்மைப் பொறுத்த வரையில் ஒரு அபூர்வமான நிகழ்வு என்றே கருதுகிறோம். அவருடைய நடைப்பயணம் முழுவதிலும் அவர் கட்சி நலன், தேர்தல் வெற்றிகளைக் கடந்து ஆர்.எஸ்.எஸ். கருத்தியல் ஆபத்துகளையே முன் வைத்து, மக்களை அணி திரட்டி வருகிறார்.

“ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்திற்கு நான் ஒருபோதும் போக மாட்டேன். நீங்கள் என் கழுத்தை அறுத்தாலும் நான் அங்கு செல்லமாட்டேன். எனது குடும்பத்திற்கு என்று ஒரு கொள்கை உள்ளது. அது ஒரு சிந்தனை அமைப்பைக் கொண்டுள்ளது. நாட்டில் உள்ள அனைத்து அமைப்புகள் மீதும் பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் அழுத்தம் உள்ளது. பத்திரிகைகள் மீது அழுத்தம் உள்ளது. அதிகாரத்துவத்தின் மீது அழுத்தம் உள்ளது. தேர்தல் ஆணையத்தின் மீது அழுத்தம் உள்ளது. அவர்கள் நீதித்துறை மீதும் அழுத்தம் கொடுக்கிறார்கள்.

எனவே இது ஒரு அரசியல் கட்சிக்கும், மற்றொரு அரசியல் கட்சிக்கும் இடையிலான சண்டை அல்ல. அவர்களால் கைப்பற்றப்பட்ட அமைப்புகளுக்கும், எதிர்ப்போருக்கும் இடையே தான் இப்போது சண்டை” என்று அவர் தெளிவாகப் பேட்டி அளித்திருக்கிறார்.

அனைத்து அமைப்புகளிலும் ஆர்.எஸ்.எஸ். தாக்கம் இருப்பதை அவர் சுட்டிக்காட்டும்போது, காங் கிரசையும் அதில் உள்ளடக்கியிருக் கிறார். கட்சிக் கண்ணோட்டத்தில் தனது கட்சி என்பதற்காக விலக்கி வைக்க அவர் தயாராக இல்லை. சொல்லப் போனால் காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே ஆர்.எஸ்.எஸ். பாசிசப் பார்ப்பனியக் கருத்தியலை ஏற்றுக் கொண்டுள்ள சக்திகளை எதிர்த்துத் தான் போராடி வருகிறார். கட்சித் தலைமைப் பொறுப்பை அவர் ஏற்க மறுப்பதற்கும் இதுவே அடிப்படை என்று கூறலாம். நேருவும், காமராசரும் காங்கிரசுக்குள்ளேயே இத்தகையப் போராட்டத்தை நடத்தியதை நாம் வரலாறுகளில் பார்க்க முடிகிறது.

இராஜாஜியின் (ஆச்சாரியார்) குலக் கல்விக்கு எதிராக மக்கள் கல்வியை முன் வைத்தவர் காமராசர். இராஜேந்திர பிரசாத், பட்டேல்களின் இந்துத்துவத்துக்கு எதிராக மதச் சார்பின்மையை உயர்த்திப் பிடித்தார் நேரு. அவ்வப்போது காந்தியின் ‘குழப்பங்களையும்’ அவர் எதிர்கொள்ள நேர்ந்தாலும் காந்தியை ‘இந்துத்துவ’ அணிக்குள் அவர் பொருத்திப் பார்க்கவில்லை. ஒரு கட்டத்தில் காந்தியே குழப்பங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றபோது தான் கோட்சேயின் துப்பாக்கிக் குண்டுகள் காந்தியின் உயிரையே பறித்தது.

நீண்டகாலத்துக்குப் பிறகு காங்கிரசுக்குள்ளேயே பார்ப்பனிய எதிர்ப்பு என்ற சங்கிகளின் சனாதன எதிர்பார்ப்பு கருத்தியல் பேராட்டமாக உயிர் பெறத் தொடங்கியிருக்கிறது. அதற்கு ராகுல் காந்தி தலைமை ஏற்க முன் வந்திருக்கிறார். ராகுல் காந்தியின் இந்தப் போராட்டத்தை சனாதன எதிர்ப்பு சக்திகள் வலுவூட்ட வேண்டியது அவசியமாகும்.

# பெரியார் பல்கலைக்கழக முறைகேடுகள் மீதான விசாரணை வரவேற்கத்தக்கது : கழகத் தலைவர் அறிக்கை

பெரியார் பல்கலைக்கழக முறைகேடுகள் மீதான விசாரணை வரவேற்கத்தக்கது என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிக்கை விடுத்துள்ளார்.

சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் கடந்த பல ஆண்டுகளாகவே பணி நியமனம் போன்றவற்றில் இட ஒதுக்கீட்டு விதிகளைப் பின்பற்றாமை, விதிகளை மீறி பாரபட்சமாய் நடந்து கொள்ளுதல்,உரிமை கேட்போரை இடைநீக்கம், பணி நீக்கம் செய்தல் போன்ற நடவடிக்கைகளையும் கண்டித்து திராவிடர் விடுதலைக் கழகம் பல ஆர்ப்பாட்டங்களை பல்கலைக்கழகத்திற்கு முன் கடந்த காலங்களில் நடத்தி இருக்கிறது.

மேலும் பெரியார் பல்கலைக் கழகத்தில் நடக்கும் முறைகேடுகளை விளக்கி அரசுக்கும் உயர்கல்வி துறைக்கும் பல்வேறு முறையீட்டு மனுக்களையும் அனுப்பி இருக்கிறது.

1) அண்மையில் நடந்த உடற்கல்வி இயக்குனர், நூலகர் போன்ற பணி நியமனங்களில் சுழற்சி முறையைப் பின்பற்றாமல் நியமனம் செய்தது.

2) போலியான கல்விச் சான்றிதழ்கள் என தெரிந்தும் போலி சான்றிதழ் அளித்தவர்களையே பணியில் அமர்த்தியது.

3) துறைத்தலைவர்களை சுழற்சி முறையில் நியமிக்காதது.

4) துணைவேந்தர் முன்னரே முடிவு செய்தவர்களை பணி நியமனம் செய்தது

5) இந்துத்துவ ஆதரவு பரப்புரைகளில், செயல்பாடுகளில் ஈடுபடுவதை துணைவேந்தரே ஊக்குவிப்பது,தாமே ஈடுபடுவது போன்ற பல குற்றச்சாட்டுகள் விவாதத்திற்கு வந்திருக்கின்றன.

இப்போது அவற்றை விசாரித்து நடவடிக்கை எடுப்பதற்காக உயர்கல்வித்துறையின் கூடுதல் செயலாளர்,இணைச் செயலாளர் ஆகியோரை உள்ளடக்கிய விசாரணைக் குழுவை நியமித்திருக்கும் அறிவிப்பு வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

இந்த விசாரணைக் குழு முன்னர் எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்தும், உரிமைக்கு குரல் கொடுத்த ஆசிரியர் சங்கப் பொறுப்பாளரை - பல்கலைக்கழக தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த பணியாளர்களை பணி நீக்கம் செய்ததையும் விசாரிக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் முன்வைக்கிறோம்.

மேலும் விசாரணை முடிந்ததும் வெள்ளை அறிக்கையாக வெளியிட வேண்டும் என்ற வேண்டுகோளையும் முன் வைக்கிறோம்.

ஆணையத்தின் இந்த விசாரணையும் அதன் அடிப்படையிலான நடவடிக்கைகளும் ஆளுநரின் ஆதரவு இருக்கிறது என்ற ஆணவத்தோடு நடந்து கொள்ளும் துணைவேந்தரின் போக்குக்கும், பெரியார் பல்கலைக் கழக முறைகேடுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் என்றும் நம்புகிறோம்” என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## ‘சர்வம் நிரந்தரம்!’

2024 நாடாளுமன்ற தேர்தல் முடிவுக்காக ‘பாரத தேசத்து’ குடிமக்களான வாக்காளர்கள் யாரும் காத்திருக்க வேண்டாம் – அடுத்த பிரதமர் மோடி தானாம்; பா.ஜ.க. கட்சித் தலைவர் ஜெ.பி. நட்டா தானாம்; அமீத்ஷா ‘ஜீ’ அறிவித்து விட்டார். “தேர்தல் ஆணையமே; மூட்டைக் கட்டிக் கொண்டு ஓடு; வாக்கு எந்திரங்களை உடைத்து அதானி துறைமுகத்துக்கு பார்சலில் அனுப்பு” என்று அமீத்ஷா, விரைவில் அறிவிப்பார்.

எதற்கு பல்லாயிரம் கோடி ரூபாயை பாழடித்து, ஒரு ‘தேர்தல்’ திருவிழாவை நடத்த வேண்டும்?அந்தப் பணத்தை இராமன் கோயிலில் போட்டாலாவது மக்கள் ‘சுபிட்சம்’ பெறுவார்களே என்கிறார்கள் சங்கிகள்.

அப்படியானால், “ஒரே நாடு; ஒரே தேர்தல்” என்றெல்லாம் விவாதங்களை தேர்தல் ஆணையம் ஏன் நடத்துகிறது என்று கேள்வி கேட்கக் கூடாது. தேர்தல் ஆணையம் என்று ஒன்று ‘பரத கண்டத்தில்’ இராமன் காட்டிய வழியில் தேர்தலை எல்லாம் நடத்திக் கொண்டிருக்கிறது, என்று உலக நாடுகளுக்கு படம் காட்ட வேண்டுமல்லவா? அதற்குத் தான்.

மோடி, நட்டா பதவிகள் உறுதியான நிலையில் தமிழ்நாட்டின் ஆளுநர் ‘ரவி’ பதவியும் உறுதியாகுமா? யாருக்குத் தெரியும்; ‘தினமலரைத்’ தவிர! அவர் தான் ஆளுநராகவும் நீடிப்பார் என்கிறது, அந்த ‘சங்கி’களின் ஏடு! பின்னர் எதற்கு டெல்லிக்கு ஓடியிருக்கிறார்? திடீரென்று, ‘தமிழகம்’ என்பதை கைவிட்டு, ‘தமிழ்நாடு ஆளுநர் பொங்கல் வாழ்த்து’ என்று, பல்டி அடித்திருக்கிறார்? “அதெல்லாம் ஆளுநர் பல்டி அடிக்கவில்லை; தமிழக அரசு தான் நடுங்கிப் போய் சமாதானக் கொடியைத் தூக்கி இருக்கிறது” என்ற புளுகு மூட்டையை அவிழ்த்து விடுகிறது, இந்த ‘பூணூல்’ ஏடு!

இப்போது ஆளுநரே தன்னிலை விளக்கம் தந்து விட்டார். ‘தமிழ்நாடு’ பெயரை மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் நான் பேசவில்லை என்று ஆளுநர் அறிவித்துள்ளார். அந்த விளக்கத்திலும் நேர்மை இல்லை. அரை உண்மை; அரை பொய் கலந்து நிற்கிறது. இந்த நிலையில் ‘தினமலரை’ எதைக் கொண்டு சாற்றுவது என்பதை மக்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.

“அது சரி; அண்ணாமலை கதி என்ன? அவரும் நட்டாவைப்போல தமிழ்நாட்டின் பா.ஜ.க. நிரந்தரத் தலைவர் தானா என்று கேட்டால், நம்மிடம் பதில் இல்லை. ஒன்றை மட்டும் நிச்சயமாகக் கூற முடியும். நிரந்தரக் ‘காமெடி’யனாக அவரே நீடிப்பார். அந்த காமெடியன் பதவியை அவரிடமிருந்து பறிக்க எந்த சக்தியாலும் முடியாது. ஆதாரம் இல்லாமல் நாம் கூறவில்லை. சென்னையிலிருந்து திருச்சி சென்ற தனியார் விமானத்தில் பயணம் செய்யப் போன அவர், விமானத்தின் ‘எமர்ஜென்சி’ கதவுக்கான பட்டனை அழுத்தி விளையாடியிருக்கிறர்.

எந்த நேரத்தில் எதைச் செய்வார் எதைப் பேசுவார் என்று ஊகிக்கவே முடியாது. நாளைக்கு நெடுஞ்சாலையில் காரில் பயணம் போனால் காரை சாலையின் குறுக்கே நிறுத்தி விட்டு சட்டையைக் கழற்றிக் கொண்டு குட்டிக்கரணம் போடலாம். தன்னை எதிர்த்த சொந்தக் கட்சிக்காரர்களிடம் ‘கமலாலயத்தில்’ ‘கட்டா குஸ்தி’ போடலாம். கட்சியையே கலைத்து விட்டு நான் தான், இனி நிரந்தரத் தலைவன் என்று கூட அறிவிக்கலாம்; யார் கண்டது?

நிரந்தர பிரதமர், நிரந்தர உள்துறை அமைச்சர்களை அறிவிக்கும் ஒரு கட்சியில் ஒரு நிரந்தர காமெடியன் மட்டும் மாநிலத் தலைவராக இருக்கக் கூடாதா என்ன?

**– கோடங்குடி மாரிமுத்து**

– புரட்சிப் பெரியார் முழக்கம் 19.01.2023

# ஆளுநரைக் கண்டித்து கழகம் முன்னெடுத்த ஆர்ப்பாட்டங்கள்

***ஆளுநரை கண்டித்து பல்வேறு இடங்களில் நடந்த கழகம் முன்னெடுத்த ஆர்ப்பாட்டங்கள்.***

**மேட்டூர் :** *ஆளுநரே வெளியேறு! ஒன்றிய அரசே, ஆணவம் பிடித்த ஆளுநரைத் திரும்பப் பெறு என்ற முழக்கத்தோடு மேட்டூர் நகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் ஒருங்கிணைப்பில் தோழமை அமைப்பு களுடன் 12.01.2023 வியாழன் மாலை 4.30 மணியளவில் மேட்டூர் சின்ன பார்க் பகுதியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.*

*கண்டன ஆர்ப்பாட்டம் மேட்டூர் நகரச் செயலாளர் குமரப்பா தலைமையில் தொடங்கியது. ஆர்ப்பாட்டத்தில் குமரப்பா, ஆளுநரைக் கண்டித்து கண்டன முழக்கமிட அனைவரும் முழக்கமிட்டனர்.*

*ஆர்ப்பாட்டத்தில் தமிழ்ப் புலிகள் கட்சியின் வடக்கு மாவட்டச் செயலாளர் சி.சதீஷ், சிபிஐ (எம்) மாவட்ட செயற்குழு உறுப்பினர் வி.இளங்கோ, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மேட்டூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் சிவக்குமார், SDPI கட்சியின் மேட்டூர் சட்டமன்ற தொகுதி தலைவர் ஃபைரோஸ், திராவிடர் விடுதலைக்கழகத் தலைமைக் குழு உறுப்பினர் சக்திவேல், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் கொளத்தூர் ஒன்றிய செயலாளர் சேட்டு குமார் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.*

*அனைவரும் ஆளுநர் ரவி சட்டமன்றத்தில் சட்ட விரோதமாக நடந்து கொண்டதை விளக்கி பேசினார்கள். நிறைவாகக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கண்டன உரை நிகழ்த்தினார்.*

*தலைவர் தமது உரையில் “ஆளுநரின் அத்து மீறல்களையும், ஆளுநர் ஜனநாயக விழுமியங்களுக்கு எதிராகவும், தனது அதிகார வரம்புகளை மீறியும் சனாதன தர்மம், இந்தி மொழி கொள்கை, தமிழ்நாடு என்ற சட்டபூர்வ பெயரை மாற்றல் போன்ற செயல்களால் பிஜேபி நபரை போல தொடர்ச்சியாக பேசி வருகிறார் என்றும் எனவே ஒன்றிய அரசே ஆளுநரை திரும்ப பெற வேண்டும்” என்றும் குறிப்பிட்டார்.*

*நிறைவாக தோழர் ஓ. சுதா நன்றி கூற கண்டன ஆர்ப்பாட்டம் நிறைவடைந்தது.*

*ஆர்ப்பாட்டத்தில் சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் சி.கோவிந்தராஜ், மாவட்ட தலைவர் சூரியக்குமார், செயற்குழு உறுப்பினர் காவை. ஈஸ்வரன் மற்றும் நங்கவள்ளி, வனவாசி,மேட்டூர் RS, மேட்டூர் நகரம், கொளத்தூர், காவலாண்டியூர் ஆகிய பகுதிகளில் இருந்து பொறுப்பாளர்களும், தோழர்களும் திரளாக கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தை விளக்கி பொதுமக்களுக்கு துண்டறிக்கை வழங்கப்பட்டது.*

**சேலம் :** *திராவிடர் விடுதலைக் கழகம் சேலம் கிழக்கு மாவட்டம் சார்பாக ஆளுநரே வெளியேறு! ஒன்றிய அரசே ஆணவம் பிடித்த ஆளுநரை திரும்ப பெறு என்று வலியுறுத்தி 12.01.2023 காலை 11மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள பழைய நாட்டாண்மை கழக கட்டிடம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.*

*ஆர்ப்பாட்டத்திற்கு கிழக்கு மாவட்டக் கழகத் தலைவர் க. சக்திவேல் தலைமை தாங்கினார். ஆளுநரைக் கண்டித்து முழக்கமிட்டு மாவட்ட அமைப்பாளர் பெருமாள் கண்டன முழக்கமிட்டு ஆர்ப்பாட்டத்தைத் தொடங்கி வைத்தார்.*

*அதைத் தொடர்ந்து ஆளுநரின் சட்டவிரோத போக்குகளையும் தமிழ்நாட்டிற்கு எதிரான நடவடிக்கைகளையும் விளக்கி தோழமை அமைப்புகளின் தலைவர்கள் தோழர்கள் கண்டன உரையாற்றினார்கள்.*

*மோகன் - இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, காஜாமைதீன் - விடுதலை சிறுத்தைகள் கட்சி, உதய பிரகாஷ் - தமிழ் புலிகள் கட்சி, மாரியப்பன் - தமிழ் தேச மக்கள் முன்னணி, சுந்தரவதனம் - திராவிட இயக்க தமிழர் பேரவை, வின்சென்ட் - புரட்சிகர இளைஞர் முன்னணி, பொன் சரவணன் - தமிழ் கலாச்சார இயக்கம், மோ.பாலு - மாநகர அமைப்பாளர் திவிக, தேவபிரகாஷ் - மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் திவிக ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.*

*மாநகர செயலாளர் ஆனந்தி நன்றியுரை கூறி ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்தார். ஆர்ப்பாட்டத்தை விளக்கி பொதுமக்களிடம் துண்டறிக்கைகள் வழங்கப்பட்டது.*

*இந்த ஆர்ப்பாட்டத்தில் இளம்பிள்ளை ஏற்காடு ஆத்தூர் சிந்தாமணியூர் சேலம் மாநகரத்தை சார்ந்த தோழர்கள் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.*

**திருப்பூர் :** *திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் ஒருங்கிணைப்பில் தோழமை அமைப்புகளுடன் இணைந்து ஆளுநரே வெளியேறு! ஒன்றிய அரசே ! தமிழக ஆளுநரைத் திரும்பப் பெறு! எனும் முழக்கங்களுடன் கண்டண ஆர்ப்பாட்டம்*

*13.01.2023, வெள்ளிக்கிழமை, காலை 10:30 மணியளவில் திருப்பூர் மாநகராட்சி அலுவலகம் முன்பு நடைபெற்றது.*

*ஆர்ப்பாட்டம் கழகப் பொருளாளர் தோழர் துரைசாமி தலைமையில் திருப்பூர் மாவட்டத் தலைவர்முகில் ராசு முன்னிலையில் நடைபெற்றது.*

*ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாட்டு ஆளுநரின் தமிழ்நாட்டிற்கு எதிரான போக்கை கண்டித்தும் ஆளுநரே வெளியேறு ஒன்றிய அரசே ஆளுநரை திரும்பப் பெறு என வலியுறுத்தி தோழர்கள் கண்டன உரையாற்றினார்கள்.*

*கண்டன உரையாற்றியோர் : சீனிவாசன்- தமிழக வாழ்வுரிமைக் கட்சி, தமிழ் அமுதன் - பொறுப்பாளர், புரட்சிகர இளைஞர் முன்னணி; ஷேக் அலாவுதீன் - தலைமைக் கழகபேச்சாளர், SDPI கட்சி; டேவிட் - அணைமேடு; வே. கார்மேகம் - மக்கள் பாதுகாப்பு இயக்கம் மற்றும் தமிழ்நாடு மாணவர் கழகம் கனல் மதி, மாவட்ட அமைப்பாளர் சங்கீதா, மாணவர் கழகப் பொறுப்பாளர் மகிழவன், இணையதள பொறுப்பாளர் பரிமளராசன், கழகப் பொருளாளர் துரைசாமி ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.*

*விடுதலைச் செல்வன் நன்றியுரையுடன் கண்டன ஆர்ப்பாட்டம் நிறைவடைந்தது.*

**ஈரோடு :** *14-01-2023 திராவிடர் விடுதலைக் கழகம் ஈரோடு மாவட்டம் சார்பாக தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவியைக் கண்டித்து கண்டன ஆர்ப் பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாநில அமைப்புச் செயலாளர் ப.இரத்தினசாமி தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தில் ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞரணி செயலாளர் பேரன்பு கண்டன உரையாற்றினார். அதன் தொடர்ச்சியாக மாநில வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன் கண்டன உரை நிகழ்த்தினார். அப்போது காவல்துறையினர் தங்களுக்கு ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்று கூறி தோழர்கள் அனைவரையும் கைது செய்து மாலையில் விடுவித்தனர்.*

*கைதான தோழர்கள் விவரம்: மாநில அமைப்புச் செயலாளர் ப.இரத்தினசாமி, மாநில வெளியீட்டுச் செயலாளர் இராம.இளங்கோவன், எழிலன்- ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர், செல்வகுமார்- ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர், கண. குறிஞ்சி - ஒருங்கிணைப்பாளர், சமூக நீதிக் கூட்டமைப்பு தோழர்கள் கணேசன், திருமுருகன், பெருந்துறை பழனிச்சாமி, பேரன்பு, பிரபு, சென்னிமலை கார்மேகம்.*

# ‘பஞ்ச பூதங்கள்’ தான் உயிரை இயக்குகிறது என்பது அறிவியலுக்கு எதிரானது

*மனித உடல் - நெருப்பு, காற்று, நீர், பூமி, வானம் எனும் பஞ்ச பூதங்கள் ஒருங்கிணைப்பால் உருவானது என்றும் உயிர் பிரிந்து மரணம் நிகழும்போது இந்த அய்ந்தும் தனித்தனியே பிரிந்து விடுகிறது என்றும் ஒரு கூற்று நம்பப்படுகிறது. நீண்டகால இந்த நம்பிக்கை அறிவியலுக்கு உடன்பட்டதா? இல்லை.*

*பிரான்ஸ் நாட்டின் இரசாயனத்துறை ஆராய்ச்சியாளர் அன்டோனி லெவோய்சியர்* (Antoine Lavoisier) *நிரூபித்த அறிவியல் ஆய்வின்படி நெருப்பு எரிதல் என்பது ஒரு இரசாயன நிகழ்வு. காற்று என்பது வாயுக்களின்* (Gases) *கலவை. நீர் என்பது, அய்ட்ரஜன் மற்றும் ஆக்சிஜனைக் கொண்டது. எனவே நெருப்பு, காற்று, நீர் தனி படிமங்கள் அல்ல. அதேபோல பூமியும், வானமும் தனியான படிமங்கள்* (elements) *அல்ல.*

*அறிவியல் கலைக் களஞ்சியம் ‘படிமம்’ என்றால்* (elemets) *என்னவென்று விளக்குகிறது. ஒரே வகையான அளவைக் கொண்டதே படிமம். பிரபஞ்சத்தில் அடிப்படையே படிமங்கள் தான். அதை மேலும் எளிமையாகப் பிளக்க முடியாது. உலகில் 109 படிமங்கள் உள்ளன. அதில் 91 இயற்கையாகக் கிடைப்பவை. 18 செயற்கையாக உருவானவை.*

*பூமியில் உயிர் வாழும் அனைத்தும் ‘கார்பன்’ எனும் படிமத்தை அடிப்படையாகக் கொண்டவை. உயிர் அணுக்கள் செயல்பாட்டுக்கு கார்பன்தான் அடிப்படையானது. பூமியில் நிறைந்திருக்கும் மற்றொரு படிவம் ஆக்சிஜன். காற்று, நீர், மலைகளிலும் ஆக்சிஜன் உண்டு. ‘பஞ்சபூதம்’ என்று நம்பப்படும் உயிர் வாழ்தலுக்கான அடிப்படையில் கார்பன் இடம் பெறவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். கார்பன் இயங்காவிட்டால் உயிரணுக்கள் இல்லை. அதேபோல் உடல் எலும்புகளுக்கு வலிவூட்டுவது ‘கால்சியம்’.*

*எலும்புகள் வலுவின்றி மனிதர்களோ, மிருகங்களோ இயங்கவே முடியாது. பிரபஞ்சம் உருவானதற்கு அடிப்படையாக இருந்தது ஹைட்ரஜன். அது 90 சதவீதம் பரவி நிற்கிறது. ஹைட்ரஜன் சுவையோ, மணமோ, வண்ணமோ இல்லாத வாயு. அமிலங்களுக்கு அமிலத் தன்மையைத் தருவதே ஹைட்ரஜன் தான். இப்படி உயிர் வாழ்தலுக்கு பல படிமங்கள், கூறுகள் தேவைப்படுகின்றன. இது தான் அறிவியல். ‘பஞ்சபூதம்’ மட்டுமே உயிர் வாழ்தலை உறுதி செய்கிறது என்பது, அறிவியலுக்கு எதிரான நம்பிக்கைகள். ஆன்மீகத்தை - அறிவியலோடு இணைத்து கடவுள் படைப்போடு முடிச்சுப் போடும் பேச்சுகள் அறிவியலுக்கு எதிரானதே!*

**– ‘ரேடிக்கல் ஹியுமானிஸ்ட்’ ஜன. 2023–லிருந்து**
**‘இரா’**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் விடுதலை : வழக்கு நடத்திய திராவிடர் கழக வழக்கறிஞர் திருப்பூர் பாண்டியனுக்கு கழகம் நன்றி

2014ஆம் ஆண்டு அறிவுக்கு ஒவ்வாத ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜை ஆபாசங்களை விளக்கி மேட்டுப்பாளையம் பேருந்து நிலையத்தில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாவட்டத் தலைவர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன், தோழர்கள் அன்னூர் முருகேசன், முடுக்கந்துறை இரவிச்சந்திரன் துண்டறிக்கை வழங்கி பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தனர்.

இந்து முன்னணி கும்பல் சிலர் துண்டறிக்கை தரக்கூடாது என ஆபாசமாகப் பேசி ரகளையில் ஈடுபட்டு மோதலில் முடிந்த நிலையில் தோழர்கள் அன்னூர் முருகேசன், முடுக்கந்துறை இரவிச்சந்திரன் ஆகியோரை மேட்டுப்பாளையம் காவல்துறை கைது செய்தது.

இந்து முன்னணியினர் சிலரையும் காவல்துறை கைது செய்தனர். கழகத் தோழர்கள் 15 நாள் சிறைக்கு பின் பிணையில் வெளிவந்தனர். இந்த வழக்கு 8 வருடமாக நடந்து வந்தது.

திராவிடர் விடுதலைக் கழக தோழர்களுக்காக திராவிடர் கழகத்தின் வழக்கறிஞர் திருப்பூர் பாண்டியன் வழக்கறிஞராக தொடர்ந்து வாதாடினார். இந்நிலையில் 11.1.2023 இன்று திராவிடர் விடுதலைக் கழக தோழர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இந்த வழக்குக்காக தொகை ஏதும் பெறாமல் கொள்கைக்காக தன் சொந்த செலவில் பணியாற்றி வெற்றி பெற்று கொடுத்த வழக்கறிஞர் பாண்டியனுக்கு கழகத் தோழர்கள் நன்றி தெரிவித்தனர்.

விடுதலையான தோழர்களையும் வழக்கறிஞர் பாண்டியனையும் பெரியார் பெருந்தொண்டர் இரும்பொறை சுந்தரமூர்த்தி, திராவிடர் கழக கோவை மாவட்டத் தலைவர் மேட்டுப்பாளையம் சு.வேலுச்சாமி, தமிழ்ப்புலிகள் மூர்த்தி நேரில் சந்தித்து பாராட்டி வரவேற்றனர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பெரியார் சிலைக்கு மாலை போட்ட போது எனது மனதில் வார்த்தைகளில் விவரிக்க முடியாத அளவிற்கு ஒரு பரவசத்தை நான் அடைந்தேன். இன்னும் பெருமையாக சொல்ல வேண்டும் என்றால் அங்கே வசிக்கின்ற ஜெசிகா, ஹாசினி என்ற இரண்டு குழந்தைகள் என் கையைப் பிடித்துக் கொண்டு “மாமா, நீங்கள் எங்க வீட்டுக்கு வர வேண்டும்” என்று சொல்லி, வீட்டிற்கு அழைத்துச் சென்று உணவளித் தார்கள். அப்போது நான் “உங்களுக்கு இங்கே எல்லா வசதிகளும் இருக்கிறதா? எதாவாது தேவையா?” என்று கேட்டதற்கு அக் குழந்தைகள் “நாங்கள் எங்களுக்காக எதுவும் கேட்கவில்லை, இங்குள்ள சிறுவர்கள் அனைவரும் விளையாடுவதற்கு ஒரு பூங்கா வேண்டும்” என்று சொன்னார்கள். அப்போது நான் உடனே அந்த மாவட்ட ஆட்சியரை அழைத்து, அங்குள்ள பொறுப்பு அமைச்சரை அழைத்து அந்த பூங்கா அமைப்பதற்கு உடனே உத்தரவை பெற்றுக் கொடுத்தேன். என்பதை இந்த நேரத்தில் தெறிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போல், அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கி பெரியாரின் நெஞ்சிலும், முத்தமிழறிஞர் கலைஞர் நெஞ்சிலும் தைத்த முள்ளை நீக்கியிருக்கிறார் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். அதே போல், அன்னைத் தமிழில் அர்ச்சனை திட்டம் மூலம் தமிழர் வழிபாட்டு உரிமைகளை பெற்றுத் தந்துள்ளார். இன்னும் ஏராளமான சமூக நீதித் திட்டங்களை வழங்கி வருகிறார் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். இந்த அரசினுடைய பெயரே திராவிட மாடல் அரசு என்பது தான். எனவே இந்த அரசுக்கு துணை நின்று நாம் ஆற்ற வேண்டிய பணி என்பது நம் கொள்கைகளையும், போராட்ட வரலாறுகளையும், அரசின் சாதனைகளையும் மக்களிடம் கொண்டு போய் சேர்ப்பது தான்.

நாங்கள் இளைஞரணி சார்பாக சென்ற வருடம் ஜூன் 3ம் தேதி கலைஞருடைய பிறந்தநாளில் தலைவர் எங்களுக்கு ஆணையிட் டிருந்தார் திராவிட மாடல் பயிற்சி பாசறையை தமிழகம் முழுவதும் அனைத்து தொகுதிகளிலும் நடத்த வேண்டும் என்று. அதன்படி 250 கூட்டங்களை கடந்த ஆறு மாதங்களில் வெற்றிகரமாக நடத்தி முடித்தோம். இளைஞர்களை இயக்கத்தில் இணைப்பதும், அவர்களுக்கு கொள்கையை கற்றுக் கொடுப்பதும், அவர்களை வழிப்படுத்துவதும் என்பது அவ்வப்போது நடத்தப்படுவது அல்ல. அது ஒரு continues process. அது எப்பொழுதுமே நடந்து கொண்டிருக்க வேண்டும் என்பது தலைவர் அவர்கள் எங்களுக்கு எப்போதும் அறிவுரை வழங்கியுள்ளார்கள். அண்ணன் கொளத்தூர் மணி அவர்கள் கூட இந்த 250 கூட்டங்களில் 13 கூட்டங்களில் கலந்து கொண்டு திராவிட இயக்க வரலாற்றையும், மாநில சுயாட்சிக்கான போராட்டங்கள் அதன் அவசியத்தையும் எடுத்துக் கூறி அருமையாக உரையாற்றினார்கள். அதற்காக இந்த கூட்டத்தில் இளைஞரணி சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்ற கொள்கை பரப்பும் பணிகளை இன்னும் அதிகமாக மேற்கொள்ள வேண்டும் என இந்த தமிழர் திருநாள் பொங்கல் நிகழ்ச்சியின் வாயிலாக உங்களை எல்லாம் நான் கேட்டுக் கொள்கிறேன். சாதி, மத வேறுபாடுகள் இல்லாத, சடங்குகள் புகுத்தப்படாத இந்த பொங்கல் விழா குறித்தும், இந்த விழாவை ஏன் நாம் அனைவரும் கொண்டாட வேண்டும் என்பது குறித்தும் தந்தை பெரியார் அவர்கள் பல நேரங்களில் குறிப்பிட்டு பேசியுள்ளார்” என்றார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்.

# நங்கவள்ளி - வனவாசியில் பெரியார் சுவரொட்டியைக் கிழித்த பா.ஜ.க.காரர் மன்னிப்புக் கேட்டார்

சேலம் மேற்கு மாவட்ட நங்கவள்ளி ஒன்றிய திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக பெரியார் 49 ஆவது நினைவு நாளில் ஒட்டப்பட்டிருந்த போஸ்டர் கிழிப்பு சம்பந்தமாக நங்கவள்ளி காவல் நிலையத்தில், மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி சி.அன்பு தலைமையில் தோழர்களின் சார்பில் புகார் மனு அளிக்கப்பட்டது.

அந்தப் புகாரின் விசாரணையில் தெரியவந்தது - வனவாசி பகுதியைச் சார்ந்த பா.ஜ.க. கட்சியின் நபர் நஞ்சப்பன் த/பெ. மாரிச்செட்டி தேவாங்கர் தெரு பேரூராட்சி பின்புறம் உள்ளவர் என்பது விசாரணையில் தெரியவந்தது.

காவல்துறை விசாரித்ததில் நஞ்சப்பன் என்பவர் சொல்லியது , “நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் நெசவுத் தொழில் செய்து வருகிறேன். பா.ஜ.க.வில் உறுப்பினராக உள்ளேன் . நான் தினந்தோறும் வனவாசி சந்தைப்பேட்டை அருகில் உள்ள டீக்கடையில் காலையில் 3 மணி அளவில் டீ குடிப்பது வழக்கம். 24/12/2022 தேதி வழக்கம்போல் விடியற்காலை டீ குடிக்க வழக்கம்போல் சென்றேன் . குளிர்காலம் என்பதால் சந்தைப்பேட்டை வணிக வளாகத்தில் சுவற்றின் மீது ஒட்டப்பட்ட போஸ்டரை கிழித்து வந்து குளிர் காய்வது வழக்கம். அன்றைய தினமும் அதேபோல் போஸ்டரை கிழித்து வந்து குளிர் காய்ந்த பொழுது அந்த போஸ்டரில் பெரியார் படம் உள்ளது என்று தெரிந்து அந்தப் போஸ்டரை ஒதுக்கி வைத்து விட்டேன் நான் பெரியார் சம்பந்தப்பட்ட போஸ்டர் என்று தெரிந்து கிழிக்கவில்லை. நான் போஸ்டரை கிழித்தது தவறுதான் எனவே மன்னிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நான் செய்த தவறை ஒப்புக் கொண்டு பெரியார் நினைவு நாள் வால் போஸ்டர் திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச் செயலாளர் நூலை நாட்டுடைமையாக்கிய முதல்வரைப் பாராட்டியும் , திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி அவர்களை வாழ்த்தியும் 100 வால் போஸ்டர் அடித்துக் கொடுத்து விடுகிறேன் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். இனிவரும் காலங்களில் இதுபோன்ற செயல்களை செய்ய மாட்டேன் என்றும் தவறும் பட்சத்தில் தாங்கள் எடுக்கும் சட்டபடியான நடவடிக்கைக்கு கட்டுப்படுகிறேன் என்பதையும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்” என்று ஆ. நஞ்சப்பன் நங்கவள்ளி காவல்துறை உதவி ஆய்வாளர் மாதேஸ்வரன் மற்றும் தோழர்கள் மத்தியிலும் வெளிப்படை தன்மையாக மன்னிப்பு கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் மேற்கு மாவட்ட செயலாளர் சி. கோவிந்தராசு, மாவட்டத் தலைவர் சூரியகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் சக்திவேல் மற்றும் நங்கவள்ளி, வனவாசி, இளம்பிள்ளை, சங்ககிரி வெள்ளரி வெள்ளிப் பகுதியைச் சார்ந்த 20க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

அடுத்த இதழில்...
கழகம் நடத்திய பொங்கல் விழா செய்திகள்.

## கழக ஏட்டுக்கு சந்தாக்கள்

சென்னையில் நடந்த தமிழர் திருநாள் விழாவில் கழக ஏட்டுக்கு சந்தாக்கள் வழங்கப்பட்டன.

திருவல்லிக்கேணி பகுதி சார்பில் - 100 சந்தா - ரூ.30,000/-

ம.கி. எட்வின் பிரபாகரன் - 40 சந்தா - ரூ.12,000/-

மயிலைப் பகுதி கழக சார்பில் - 17 சந்தா - ரூ.5,100/-

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.300
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41. ✆ 8973341377

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 20th January 2023

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN